செ.வெ.எண்: 826 நாள்: 01.12.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (01.12.2019) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

பொதுமக்களின் குறைகளை நேரடியாக சென்று தீர்வு காணும் வகையில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து பகுதிகளுக்கும் நேரடியாக சென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் 1,447 பயனாளிகளுக்கு ரூ.1,62,17,150 மதிப்பீட்டிலும், இலுப்பூரில் 997 பயனாளிகளுக்கு ரூ.1,01,72,000 மதிப்பீட்டிலும், கீரனூரில் 390 பயனாளிகளுக்கு ரூ.58,30,000 மதிப்பீட்டிலும், திருமயம் தேக்காட்டூரில் 534 பயனாளிகளுக்கு ரூ.1,14,06,400 மதிப்பீட்டிலும், பொன்னமராவதியில் 398 பயனாளிகளுக்கு ரூ.1,06,94,160 மதிப்பீட்டிலும் என மொத்தம் 3,766 பயனாளிகளுக்கு ரூ.5,43,19,710 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் கூட்டத்தில் விராலிமலை வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 2,522 மனுக்களில் 841 மனுக்களுக்கும், இலுப்பூர் வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 4,228 மனுக்களில் 2,397 மனுக்களுக்கும், குளத்தூர் வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 2,391 மனுக்களில் 1,188 மனுக்களுக்கும், திருமயம் வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 3,679 மனுக்களில் 528 மனுக்களுக்கும், பொன்னமராவதி வட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 2,027 மனுக்களில் 856 மனுக்களுக்கும் உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும் நிலுவையிலுள்ள மனுக்களை விரைவில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும்.இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், அரசு அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**